# தமிழ்நாடு அரசு
# இந்து சமய அறநிலையத் துறை, வேலூர்

## மாவட்ட அறங்காவலர் குழு நியமனம் விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு

வேலூர் மாவட்டம், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் பெறும் சட்டப்பிரிவு 46(i), 46(ii) மற்றும் 49(i) உள்ள திருக்கோயில்களுக்கு, பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்திட வேலூர் மாவட்ட அறங்காவலர் நியமன குழு அரசால் நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது. மேற்படி மாவட்ட குழுவில் உறுப்பினர்கள் நியமித்திட இந்திய நாட்டின் குடிமகனாக உள்ள இந்து சமயத்தை சார்ந்த 25 வயது பூர்த்தியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. மேற்படி விண்ணப்பதாரார்கள் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 7A, 25A, 26 மற்றும் 47–ன் படி தகுதிகள் உடையவராக இருக்க வேண்டும். அவ்விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15.07.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ **எண்.309, இரண்டாவது தளம், ஆற்காடு சாலை, காகிதப்பட்டறை, வேலூர்–12** என்ற முகவரியில் இயங்கி வரும் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள், பிற விவரங்கள், நியமனம் பெறுவதற்கான படிவம் ஆகியவற்றை **வேலூர் உதவி ஆணையர் அலுவலகம், வேலூர், காட்பாடி மற்றும் குடியாத்தம்** ஆகிய இடங்களில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர்கள் அலுவலகங்களில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும், தேவைப்படும் கூடுதல் விவரங்களை அறிந்து கொள்ளவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இடம் : வேலூர்
நாள் : 10.06.2024

**இ.ஜீவானந்தம்,** எம்.எஸ்.சி., பி.எல்.,
உதவி ஆணையர், வேலூர்
தொலைபேசி எண்.0416–2228318

வெ.ஆ.எண்.30 /செ.ம.தொ.அ/வேலூர்/ 2024. நாள்.11.06.2024

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்; சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"